படிவ எண். TPCF–1

திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகம்

செலுத்துச்சீட்டு எண் 2596/23–24

நாள். 07.03.2024

பணம் செலுத்துபவரின் பிரதி

பணம் செலுத்துபவர் பெயர் – பாலாஜி ரியால்டர்ஸ் வென்டர்ஸ் பி.லிட் மற்றும் காயத்திரி ஹௌசிங் வென்டர்ஸ் பி.லிட்

முகவரி காஸ்மோ ஹப், பேஸ் 3,
கண்ணகப்பட்டு

| கணக்கு குறியீட்டு எண் | கணக்கு இன விவரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1010 | காலிமனை வரி | 252960 |
| 4043 | நூல் நிலைய வரி | 25296 |
| 4020 | வைப்பு தொகை | 12000 |
| 1045 | மனைப்பிரிவு கட்டணம் | 26960 |
| | மொத்தம் | 317216 |

வங்கி வரவோலை மூலம் வரப்பெற்றது – 380352/ 13.02.2024 Karnataka Bank

எழுத்தால் ரூபாய் மூன்று இலட்சத்து பதினேழாயிரத்து இருநூற்று பதினாறு மட்டும்

செலுத்துபவரின் கையொப்பம்

7/03/24

இநிஉ / பொறுப்பாளர்

செயல் அலுவலர்
திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்

## திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள்
### முன்னிலை : திரு. பா. ரவி

**ப.மு.எண்.318/2023** **மனைப்பிரிவு எண்.1 /2023–24** **நாள்.07.03.2024**

**பொருள்:** மனைப்பிரிவு – செங்கல்பட்டு மாவட்டம் – திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி – கண்ணகப்பட்டு கிராமம் சர்வே எண். 150/1A5A2 மற்றும் 150/2A1B-ல் 1175 சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவினை 6 மனைகளாக பிரித்து மனைப்பிரிவுக்கான இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல்– சார்ந்து.

**பார்வை:**

1. அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.201 9
2. இணை இயக்குநர்/துணை இயக்குநர்/உதவி இயக்குநர், 124, GST Road, நகராட்சி வணிக வளாகம், செங்கல்பட்டு அவர்களின் இணையதள கடித ந.க.எண்.CTA5YM51/2022/TCP நாள்.21.04.2023
3. பாலாஜி ரியல் எஸ்டேட் வெண்டர்ஸ் பி.லிட், (ம) காயத்ரி ஹவுசிங் வெண்டர்ஸ் பி.லிட், இள்ளலூர் ரோடு, கண்ணகப்பட்டு அவர்களின் கடித நாள்.06.07.2022
4. இவ்வலுவலக கடித ந.க.எண்.318/2023 நாள்.14.07.2023
5. இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண்.343 நாள்.29.09.2023
6. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.318/2023 நாள்.20.12.2023
7. சார்பதிவாளர், திருப்போரூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1173/2023 நாள்.29.12.2023
8. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.318/2023 நாள்.02.01.2024
9. சம்மந்தப்பட்ட கோப்புகள்.

*********

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட கண்ணகப்பட்டு கிராமம், சர்வே எண். 150/1A5A2 மற்றும் 150/2A1B-ல் 1175 சதுர மீட்டர் பரப்பளவில் 6 மனைகள் கொண்ட மனைப்பிரிவுக்கு பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு இணை இயக்குனர்/துணை இயக்குநர்/உதவி இயக்குநர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், செங்கல்பட்டு அவர்களின் கடிதத்தில் தொழில்நுட்ப அனுமதி வழங்கி வரப்பெற்றதை தொடர்ந்து, பார்வை 8–ல் காணும் இவ்வலுவலக அறிவிப்பு கடிதத்தில் உரிய கட்டணங்களை செலுத்த தெரிவித்ததில், மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ. 3,17,216/–னை வங்கி வரைவோலை மூலமாகவும் (Karnataka Bank Ltd.,B Lore Koramangala Extn Branch D.D.No. 380352 Dated. 13.02.2024) நிலவகைப்பாடு மாற்றுதல் கட்டணம் ரூ. 1,95,750/– இ செலான் மூலம் உரிய அரசுத் தலைப்பில் செலுத்தி இவ்வலுகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. (செலான்நெ. 20240221005884/21.02.2024)

**மனைப்பிரிவு ஒதுக்கீடுகள் விவரம்**

| ஒதுக்கீடு விவரம் | அளவுகள் |
|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பு | 0.11.75 ஹெக்டேர் (அ) 1.175 ச. மீ |
| கோரிய மனைகள் | 06 |
| ஒதுக்கிய மனைகள் | 06 |

எனவே, மேற்காணும் மனைப்பிரிவில் அமைந்துள்ள 6 எண்ணிக்கை மனைகளுக்கு கீழ்காணும் நிபந்தனைகளின்படி மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கி இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. தெருமின்விளக்கு கம்பங்களில் அமைத்துள்ள LED மின்விளக்குகள் தினமும் ஒளிர்வதை மனைப்பிரிவுதாரர் உறுதி செய்ய வேண்டும்.
2. தெருக் குழாய்களில் தினமும் குடிநீர் வருவதை உறுதி செய்ய வேண்டும்.
3. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைப்பது குறித்து பொது மக்கள் அறியும் வண்ணம் மனைப்பிரிவு வரைபடத்துடன் உரிய விளம்பர பலகை அமைக்க வேண்டும்
4. M/s. Balaji Real Estate Ventures Pvt Ltd. M/s. Gayathri Housing Ventures Pvt Ltd., என பெயரிடப்பட்ட இம்மனைப்பிரிவு அனுமதியின் மீது கட்டணங்கள் செலுத்தியது குறித்து தணிக்கையின் போது தடை எழுப்பப்படுமாயின், தணிக்கையில் குறிப்பிடப்படும் தொகையினை செலுத்துவதற்கு மனைப்பிரிவுதாரர் பொறுப்பேற்க வேண்டும்.
5. M/s. Balaji Real Estate Ventures Pvt Ltd. M/s. Gayathri Housing Ventures Pvt Ltd., என பெயரிடப்பட்டுள்ள இம்மனைப்பிரிவின் அணுகு சாலை குறித்து பிற்காலத்தில் ஆட்சேபனைகள் எழுமாயின் உரிய அணுகு சாலையை உறுதிபடுத்தப்பட வேண்டியது மனைப்பிரிவுதாரரின் கடமையாகும்.
6. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 126–ன்படி மனைப்பிரிவில் குடிநீர் விநியோகம் குறித்து வசதிபடுத்துதல் வேண்டும். பிரிவு 158–ன்படி பொது சுகாதாரம் பேணிக்காத்தல் வேண்டும். பிரிவு 161–ன்படி வடிகால் பாதுகாக்கப்பட வேண்டும். பிரிவு 174 முதல் 179 வரை மற்றும் 189,191,199 ஆகிய பிரிவுகளின்படி மனைப்பிரிவுகளில் உள்ள சாலை, குடிநீர், வடிகால், தெருமின் விளக்குகள் ஆகியவை தவறாமல் பின்பற்ற வேண்டியது மனுதாரரின் கடமையாகும்.
7. மனைப்பிரிவு அமைந்துள்ள நிலம் குறித்து பிற்காலத்தில் ஆட்சேபனைகள் எழுப்பப்படுமாயின், மனைப்பிரிவு உரிமையாளர் முழு பொறுப்பேற்க வேண்டும். தவறும் பட்சத்தில் மனுதாரர் மீது நடவடிக்கை மேற்கொண்டு உரிய நிர்வாக ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
8. மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமம் அனுமதியில் தெரிவித்துள்ள 1 முதல் 9 வரையிலான நிபந்தனைகள் மற்றும் இரண்டு சிறப்பு நிபந்தனைகள் ஆகியவற்றில் தெரிவித்துள்ள வழிமுறைகளை தவறாது கடைபிடிக்க வேண்டும்.
9. மேற்காணும் 1 முதல் 8 வரையிலான நிபந்தனைகள் மீது மனைப்பிரிவுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. மேற்காணும் நிபந்தனைகளுக்கு மனைப்பிரிவுதாரர் உட்படுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

7/3/2024

செயல் அலுவலர்
திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்

07/03/24

பெறுநர்

M/s. Balaji Real Estate Ventures Pvt Ltd.
M/s. Gayathri Housing Ventures Pvt Ltd.,,
**No.7, Rajv Gandhi Salai,**
**Sholinganallur, Chennai- 600119.**

நகல்:

1. நகர் ஊரமைப்பு இணை இயக்குனர்/துணை இயக்குநர்/உதவி இயக்குநர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம், செங்கல்பட்டு அவர்களின் தகவலுக்கு.

2. பேரூராட்சிகளின் உதவி இயக்குனர், காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.